இந்த நூலில் வருகின்ற தேர்தலிற்கு பிறகு நடக்க இருக்கும்
நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளது. கவனமாக படித்து பயன்பெறவும்.

முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**உலக மாற்றம் எப்படி துவங்கும் எந்தவிதத்தில் அதை அடையாளம் காண்பது?**
**அதை உலக மக்களுக்கு எப்படி தெரிவிப்பது? அரசாங்கத்தினால் உள்ள இடையூறுகள் என்ன?**
**மகான் சுப்பிரமணியர் ஆசி அறிவுரை நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.03.2019

1. சற்குருநாதனே அரங்கா போற்றி
சன்மார்க்கம் வளர்த்திடும் அரசா போற்றி
அற்புதம்பட உலகமாற்றம் செய்ய வந்த
ஆறுமுகன் என் அவதார தேசிகா போற்றி
2. போற்றியே சுப்பிரமணியர் யானும்
புகலுவேன் உலக மாற்ற அறிவுரை ஆசிதன்னை
ஆற்றல்மிக்க உன் தர்மத்தின் மூலமாக
ஆறுமுகன் யானும் ஆளுமை நடத்தி வருகின்றேன்
3. வருகின்ற இனி வரும் தேர்தல் களமெல்லாம்
வாய்மை நேர்மை இல்லாத மாந்தர்கட்கு
தருகின்ற படிப்பினை காலமாக மாறுமப்பா
தானவர்கள் தர்மத்தை தேடி ஓடி வரக்கூடும்
4. கூடவே அன்னதனால் அரங்கன் தர்மமே
குறிப்பாக சன்மார்க்க சைவ நெறிமுறையை
படர்ந்து மக்களுக்கு அறிவு முதிர்ச்சி
பலமான வாக்குரிமைகள் சக்தியைப் பற்றியும்
5. பற்றிய ஞானத்தெளிவு கூடும்
பதவி மாந்தர்களை தேர்ந்தெடுக்கும் முடிவுகள்
உற்றதொரு தர்மப்படி நடக்கக் கூடும்
ஊழல்வாதிகள் ஒழிந்து அழிய நேரும்
6. நேர்மையான ஞான ஆட்சிக்கு
நிலவுலக பெருமாற்றத்துக்கு
ஆறுமுகன் மக்கள் சக்திக்குள்ளே கலந்து
ஆற்றலாக வாக்கு சக்தியாக மாற உள்ளேன்
7. உள்ளபடி மக்களிடை பேராசை ஒழிந்து
உயர்பதவி வழி பொருளை சுருட்டுகின்ற
கலக சிந்தை களவு சிந்தைகள் மாறி
கண்ணியவான்களாய் மக்களை மாற்ற உள்ளேன்

8. உள்ளபடி உன் கொள்கை ஒருபுறம் பரவபரவ
உலகத்தில் உள்ள நல்லோர்களையே இனி பதவிக்கு
வல்லமைபட தேர்வு செய்து அரசியல் நடத்த
வலுவான காலம் சடுதி வருகுதப்பா

9. வருகவே இதுபோன்ற சூழல் மாற்றம் ஆகுங்காலம்
வடிவேலன் என் உன்னருட்சீடர்கள்
வல்லமைபட கட்சி பேதங்கள் இன்றி வகிக்கும்
எல்லை பகுதி மாந்தர்கள் மூலமே தேர்வு செய்து

10. செய்துமே மக்கள் பதவிக்கு வருவர்
சேவையுள் கலந்து ஞானஆட்சி தருவர்
மெய்யுடனே உகந்தபடி தமிழக எல்லையில்
மேலவைத் தேர்தல் பின்னே இந்த மாற்றம்

11. மாற்றமதும் மக்களிடை தானே நடக்கும்
மாதவசிகளையும் மாதர்மவான்களையும்
கோலமதாய் உலகோர் அடையாளம் கண்டு
பின்பற்றி தொடர நேரும்

12. நேர்மைமிக்க இந்த காலம்
நிலமதனில் தமிழக கீழ்சபை தேர்தலோடு
மாறுதலாக மக்களிடை நடக்க இருக்க
மகான் உன் எண்ணம் நோக்கம் நிறைவேறுமப்பா

13. அப்பனே அந்தவித சூழல் தொட்டே
அகிலமாற்றத்தை நீ அறிந்து கொள்வாய்
காப்பாக உலகப் பெருமாற்றம் கந்தன் என்னால்
அரங்கன் உன் தர்மத்தால் நடப்பது உறுதி

14. உறுதிபட அரங்கன் உன் சன்மார்க்கத்துக்கு
உரைத்திடுவேன் அரசவழி இடர்கள்
கருதி வாரா கந்தவேலன் காப்பேன்
கட்டுப்பாடு இல்லாத தீநெறி அரசியல்வாதிகள்

15. அரசியல்வாதிகள் அரசு அதிகாரிகள்
அகத்தியர் சன்மார்க்கத்தை அணுகி இடர்தர வந்தால்
அரசியல் வாழ்வில் அவர்கள் முடிவு பெறுவர்
அரசு அதிகாரிகள் தங்கள் பதவியை இழப்பார்கள்

16. இழப்பதற்கு ஏதுமில்லை என்கிற வண்ணம்
இழிநிலை பெற்று நிலைகுலைவர்
அளப்பரிய மாதரும சக்தி கூட்டி
அரங்கஞானி காத்து வருகின்ற சன்மார்க்கத்துக்கு

17. சன்மார்க்கத்துக்கு தர்மம் இடவே எவரும் வருவர்
சன்மார்க்கம் வளர்க்கவே துணை புரிவர்
உன்மார்க்கம் ஆறுமுகன் என் மார்க்கமப்பா
உலகில் இடர்தர எந்த சக்தியும் இல்லை

18. இல்லை போதுமான அளவு என நீ
இங்கு தர்மமிட சோர்வு கண்டால்தான்
வல்லமைபட சன்மார்க்கத்தை தருக
வையகத்தில் எவருக்கும் சக்தி இல்லையப்பா

19. அப்பனே சன்மார்க்க தொண்டர்கள் இதுகாலம்
அரங்கன் உன் சொல்லாக வாக்காக ஏற்று
காப்பாக தான் வகிக்கும் அந்தந்த எல்லையில்
கந்தவேலா என என்னை வேண்டியே

20. வேண்டியே தொண்டுள்ளம் மிக்க மாந்தர்கட்கு
வினவிட ஆதரவு தந்தால் போதும்
தொண்டென உலக மாற்றம் வேலை நடந்தேறும்
தேசிகன் தொண்டர்கள் துணைகொண்டு இந்த மாற்றத்தை

21. மாற்றத்தை யானும் நடத்திடுவேன்
மகான் உன் அமைப்புக்கும் வாய்ப்பு வழங்கிடுவேன்
ஏற்றம் பெற ஞானஆட்சி தனக்கு
இடையூறின்றி சன்மார்க்க உன் சேவை துணை நிற்குமப்பா

22. அப்பனே ஞான மகா தேசிகனே
ஆக்கை நலம் உன் தேகமனோபலம்
காப்பாக நிலைநிறுத்தி உயர்த்துவேன்
கணமும் கந்தவேலன் சக்தியாய் இருப்பேன்

23. இருப்பேன் அகலாது அரங்கன் உந்தனோடு
இடையூறுகள் சன்மார்க்கத்திற்கு எந்தவிதத்திலும் இல்லையப்பா
விருப்பம் கொண்டே மேலவர்கள் உன்னை நாடுவர்
விரைந்து வந்து உலகமாற்றத்தில் துணை புரிவர் அறிவுரை ஆசி முற்றே.

—சுபம்—